RNI-NO: TNTAM/2021/83936

மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

சிவகங்கை | மலர்-5 | இதழ்- 168 | ஜுன்.25 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

9842961596, 9384761596
ஹோட்டல் ஸ்ரீ பழனிஸ் சைவம்
HOTEL SREE PALANIS Veg
உணவு ஆர்டர் தேவைக்கு: 80980 97273
மேல்கரை மெயின் ரோடு - மானாமதுரை

கார்த்திக் மருத்துவமனை
மனோ CT ஸ்கேன்
24 மணி நேர சேவை
சிவகங்கை

# எரிசக்தி துறையில் 401 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார் முதல்வர் விஜய்

சென்னை: ஜூன்.25-

எரிசக்தித் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 383 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 18 உதவி கணக்கு அலுவலர்கள் என மொத்தம் 401 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை முதல்வர் விஜய் வழங்கினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அரசு செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், எரிசக்தித் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 383 உதவிப் பொறியாளர்கள் (மின்னியல்) மற்றும் 18 உதவி கணக்கு அலுவலர்கள் என மொத்தம் 401 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை முதல்வர் விஜய் நேற்று (ஜூன் 24) வழங்கினார்.

முன்னதாக முதல்வர் விஜய் தலைமையில் நடைபெற்ற எரிசக்தித் துறை தொடர்பான ஆய்வுக்கூட்டத்தின்போது, மின்சார வாரியத்தில் நிலவும் பிரச்சினைகளுக்குப் பல்வேறு நிலைகளில் உள்ள 70,000க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளதும் ஒரு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.





அதனைத் தொடர்ந்து, முதல்வர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன், எரிசக்தித் துறையின் மனிதவளத்தை வலுப்படுத்தும் முயற்சியை முன்னெடுத்து, தடையற்ற மற்றும் சீரான மின்சாரம் வழங்கிடும் வகையில், ஓராண்டுக்குள் குறைந்தபட்சம் 15,000 பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டார். \

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 401 நபர்களுக்கும் வாரிய விதிமுறைகளின்படி, உடனடியாக பணிநியமன நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

அதனடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு (TNPDCL) தெரிவு செய்யப்பட்ட 383 உதவிப் பொறியாளர் (மின்னியல்) மற்றும் 18 உதவி கணக்கு அலுவலர்களுக்கு முதல்வர் இன்று பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் வெளிப்படையான ஆட்சிமுறையின் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இந்தப் பணி நியமனங்கள், எரிசக்தித் துறையின் செயல்திறனை மேலும் மேம்படுத்துவதோடு, தமிழ்நாட்டு மக்களுக்குத் தரமான மற்றும் தடையற்ற மின் சேவைகளை வழங்குவதற்கான மனிதவளத்தை வலுப்படுத்தும் முக்கிய நடவடிக்கையாகவும் இது அமையும்.

இந்நிகழ்ச்சியில், எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார், தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / மின்சார வாரியத் தலைவர் டாக்டர் ஜெ. ராதாதிருஷ்ணன், எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் அணில் மேஷ்ராம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் சேமிப்பு கட்டமைப்பு கோரிய வழக்கில் அரசு பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு



மதுரை: ஜூன்.25-

அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் அறிவியல் அடிப்படையில் சேமிப்பு கட்டமைப்பு உருவாக்கக் கோரிய வழக்கில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தலைவர் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தஞ்சையை சேர்ந்த அமிர்த ராஜ ஹமீதுதீன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், “தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் அறிவியல் அடிப்படையில் சேமிப்பு கட்டமைப்பை உருவாக்குவதற்காக நிரந்தர சேமிப்பு கிடங்குகளை கட்ட உத்தரவிட வேண்டும்.

மேலும், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை மழை, வெள்ளம் போன்றவற்றில் இருந்து பாதுகாக்கும் வகையில் சேமிப்பு, பராமரிப்பு, கையாளுதல், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு தொடர்பான நிலையான வழிகாட்டுதல்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தவும், இது போன்ற சேதங்களால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளுக்கு உரிய இழப்பீடு வழங்கும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதி ராமன் அமர்வு முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரரின் கோரிக்கையை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், “மனுதாரர் குறிப்பிட்டிருக்கும் இடம் மட்டுமல்ல, பல மாவட்டங்களில் இந்த பிரச்சினை உள்ளது. ஒரு நாள் மழையில், பல மாத உழைப்பு வீணாகிறது. பெரும் இழப்பு ஏற்படுகிறது. விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். மனு தொடர்பாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தலைவர் பதில் மனுவை தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை ஜூலை மாதத்துக்கு ஒத்திவைத்தனர்.

## “திமுக ஆட்சியில் ஒரேயொரு வழக்கு போட்டிருந்தால் விஜய் அரசியலை விட்டே ஓடியிருப்பார்” ஆர்.எஸ்.பாரதி



சென்னை: ஜூன்.25-

“நாங்கள் ஆட்சியில் இருந்தபோது ஒரேயொரு வழக்கு போட்டிருந்தால், விஜய் அரசியலை விட்டே ஓடிப்போயிருப்பார். தவறான பிரச்சாரங்களை பிஞ்சு உள்ளங்களில் ஏற்படுத்தி, அதன் மூலம் ஆட்சிக்கு வந்த விஜய் இன்று ஆட்டம் போடுகிறார்,” என திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “திமுக மிசாவையே பார்த்த கட்சி. பல்வேறு அடக்குமுறைகளை கண்டுள்ளோம். இது போன்ற பூச்சாண்டிகளை விஜய் காட்டமுடியாது. திமுகவின் வரலாறை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். நேற்று சட்டப்பேரவையில் ஆடியதைப் போல, இன்று ஆட முடியாது. மக்கள் கொதித்துப் போயுள்ளனர்.

திமுக ஆதரவாளரான ஜென் ஸீ இளைஞர் கனிஷ் தாக்கப்பட்ட விவகாரத்தில், இன்னும் 24 மணி நேரத்தில் தவெகவைச் சேர்ந்த குற்றவாளிகள் மீது எப்ஐஆர் போடப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், சைதாப்பேட்டை காவல்நிலையம் முன்பு திமுக சார்பில் மிகப்பெரிய போராட்டத்தை நடத்துவோம். இது பெரியார் பூமி. தமிழக மக்கள் இந்த மாயாஜாலங்களுக்கு அடிபணிய மாட்டார்கள். நடந்தது நடந்துவிட்டது.

தமிழக முதல்வராக பதவியேற்ற விஜய், தமிழ்நாட்டில் நிகழும் சட்டஒழுங்கு பிரச்சினைகளில் அக்கறை காட்டாமல், விஜய் மீது விமர்சனம் வைப்பவர்களை, ஆட்சியின் குறைகளைச் சுட்டிக் காட்டுபவர்களை இந்த அரசு குறிவைக்கிறது.

பாலியல் குற்றங்கள், கொலை, கொள்ளை போன்ற சம்பவங்களுக்கு பதிலளிக்காமல், அதை விமர்சிக்கும் திமுக இளைஞரணியினர், ஜென் ஸீ தலைமுறையினர் மீது தவெக அரசு தாக்குதல் நடத்தியுள்ளது. இன்ஸ்டா, சமூக வலைதளங்கள் மூலம் இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள் என்பதை மறந்துவிட்டனர்.

நாங்கள் ஆட்சியில் இருந்தபோது ஒரேயொரு வழக்கு போட்டிருந்தால், விஜய் அரசியலை விட்டே ஓடிப்போயிருப்பார். எங்களுக்கு மக்கள் நலனே பெரிதாக இருந்ததால், நாங்கள் அதை லேசாக விட்டுவிட்டதன் விளைவு, தவறான பிரச்சாரங்களை பிஞ்சு உள்ளங்களில் ஏற்படுத்தி, அதன் மூலம் ஆட்சிக்கு வந்த விஜய் இன்று ஆட்டம் போடுகிறார். அதிகாரம் இருக்கிறது என்ற காரணத்தினால், திமுகவைச் சேர்ந்த 2 இளைஞர்கள் மீது கடும் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதுகுறித்து புகார் அளித்தால், போலீஸ் எப்ஜஆர் கூட போட மறுக்கிறார்கள்.” எனத் தெரிவித்தார்.

## “தவெக அரசின் போலி பிம்பம் இளைஞர்கள் மத்தியில் சுக்குநூறாக நொறுங்கி வருகிறது” உதயநிதி



சென்னை: ஜூன்.25-

“திமுக இளைஞர்கள் ஆளுங்கட்சியையும் அரசையும் எதிர்த்து பேசினால் காவல்துறையை அனுப்புவது, அதுவே, தாக்கியவர்கள் தவெகவினர் என்றால் வேடிக்கைப் பார்ப்பதுஞ் இது தான் மாற்றமா?” என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “திமுகவின் #நிமீஸீஞ் இளைஞர்களை ஒருங்கிணைத்துக் கூட்டங்கள் நடத்தி வந்த அன்பானந்தன் அரியப்பனை, கிருஷ்ணகிரி ராயக்கோட்டையில் அவரது வீட்டுக்குள் நள்ளிரவில் அத்துமீறி நுழைந்து காவல்துறையினர் கைது செய்ய முயற்சி செய்ததை வன்மையாக கண்டிக்கிறேன்.


இதே போல சமீபத்தில், நிமீஸீ ஞீ கூட்டத்தில் பேசிய கனி என்பவர் மீது தவெக ரவுடிகள் சைதாப்பேட்டையில் கொலைவெறி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கனியை தாக்கிய குற்றவாளிகள் மீது இதுவரை எந்த வழக்கும் பதிவு செய்யாத காவல்துறை, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த கனியை மிரட்டி டிஸ்சார்ஜ் செய்ய வைத்தது.

திமுக இளைஞர்கள் ஆளுங்கட்சியையும் அரசையும் எதிர்த்து பேசினால் காவல்துறையை அனுப்புவது, அதுவே, தாக்கியவர்கள் தவெகவினர் என்றால் வேடிக்கைப் பார்ப்பதுஞ் இது தான் மாற்றமா?

நிர்வாகத்திறனற்ற சோஃபா மாடல் அரசின் போலி பிம்பம், இளைஞர்கள் மத்தியில் சுக்குநூறாக நொறுங்கி வருவதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் இந்த ஆட்சியாளர்கள் அடக்குமுறையை கையில் எடுத்து இருக்கிறார்கள். திமுக இளைஞர்களை காவல் துறையை ஏவி அச்சுறுத்தலாம் என்று ஆளும் அரசு நினைத்தால், கழகம் அதனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காது என்று எச்சரிக்கிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வாகனப் பதிவில் சிறப்பு எண் பெற கட்டணத்தை உயர்த்த முடிவு: வரைவு அறிக்கை வெளியிட்டது தமிழக அரசு



சென்னை: ஜூன்.25-

வாகனப் பதிவில் சிறப்பு எண் பெறுவதற்கான கட்டணத்தை உயர்த்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான வரைவு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

புதிதாக வாகனம் வாங்குவோர் அதை அவர்களின் முகவரிக்கு உட்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். புதிய வாகனங்களை பதிவு செய்யும்போது அந்த வட்டார போக்குவரத்து அலுவலகம் அந்த வாகனத்துக்கு என பதிவு எண் ஒன்றை வழங்கும்.

இந்த பதிவு நடைமுறையில் பதிவுக் கட்டணம் மற்றும் சேவைக் கட்டணம் வசூலிக்கப்படும். ஆனால் வாகனப் பதிவு எண்ணாக வட்டார போக்குவரத்து அலுவலகம் ஒதுக்கும் எண்ணே கிடைக்கும்.

வாகன உரிமையாளர்கள் தங்களுக்குப் பிடித்த எண் வேண்டும் என்றால் அதற்கான கூடுதல் கட்டணம் செலுத்தி ‘பேன்சி எண்’ என கூறப்படும் அந்த சிறப்பு எண்களை பெற்றுக்கொள்ளலாம்.

இந்த சிறப்பு பதிவு எண்களை பெறுவதற்கான கட்டணங்களை உயர்த்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான வரைவு அறிக்கை அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி அரசால் ஒதுக்கப்படும் முன்பதிவு, பதிவு எண்களுக்கு, தற்போதைய வரிசை மற்றும் அடுத்த மூன்று வரிசைகளுக்கு, ரூ.40 ஆயிரம் கட்டணம் இருக்கும் நிலையில், வரைவு அறிக்கையில் ரூ.80 ஆயிரமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோல 5 முதல் 8வது வரிசைக்கு ரூ.60 ஆயிரத்தில் இருந்து ரூ.1.20 லட்சம் என இரு மடங்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 13 மற்றும் 14வது வரிசைக்கான சிறப்பு எண்களை பெற ரூ.8 லட்சம் வரை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இருசக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கு, வாகனத்தின் மதிப்பை அடிப்படையாக வைத்து ரூ.2,000 முதல் ரூ.1 லட்சம் வரை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ரூ.50 ஆயிரம் மதிப்புடைய வாகனத்துக்கு ரூ.2 ஆயிரமும், ரூ.30 லட்சம் மதிப்புடைய வாகனங்களுக்கு ரூ.1 லட்சமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட கார் மற்றும் பிற வாகனங்களுக்கு ரூ.20 ஆயிரம் முதல் ரூ.1.50 லட்சம் வரை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவு அறிக்கை குறித்த கருத்துகளை ஜூலை 3ம் தேதிக்குள் உள்துறை செயலாளருக்கு அனுப்ப வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காவல் அதிகாரிகள் 15 பேர் பணியிட மாற்றம்: தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை: ஜூன்.25-

காவல் அதிகாரிகள் 15 பேர் பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளராக ஆர்.உதயகுமார் நியமனம் செய்யப்பட்டுள்ளார். திருப்பூர் தெற்கு சரக துணை ஆணையர் ஆகாஷ் ஜோஷி, நெல்லை மேற்கு துணை ஆணையராக அன்ஷுல் நாகர் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னையில் தீவிரவாத தடுப்புப் பிரிவு காவல் கண்காணிப்பாளராக ரமேஷ் பாபு நியமனம் செய்யப்பட்டுள்ளார். அடையாறு துணை ஆணையராக ஏ.சி.கார்த்திகேயன், கோயம்பேடு துணை ஆணையராக குணால் உத்தம் ஷ்ரோட் நியமிக்கப்பட்டுள்ளார்.

தாம்பரம் மத்திய குற்றப்பிரிவு துணை ஆணையராக ஐபிஎஸ் அதிகாரி ஸ்டாலின் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாகர பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு துணை ஆணையராக கீதாஞ்சலி நியமனம் செய்யப்பட்டுள்ளார். திருப்பூர் நகர வடக்கு துணை ஆணையராக ரமேஷ் கிருஷ்ணன் நியமனம், ஆவடி காவல் ஆணையரக செங்குன்றம் துணை ஆணையராக ஐபிஎஸ் அதிகாரி மகேஸ்வரி நியமனம், தாம்பரம் காவல் ஆணையரக தலைமையகம் மற்றும் நிர்வாகம் துணை ஆணையராக கண்ணன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

காவல்துறை நவீனமயமாக்கல் உதவி ஐஜியாக ஐபிஎஸ் அதிகாரி வேல்முருகன் நியமனம், திருச்சி நகர வடக்கு துணை ஆணையராக ஐபிஎஸ் அதிகாரி பனாவத் அரவிந்த் நியமனம், சென்னை சிபிசிஐடி வடக்கு மண்டல எஸ்.பி.யாக அர்புதா ராஜ்புத் நியமிக்கப்பட்டுள்ளார்.



# தேனி மாவட்ட காவல் அலுவலகத்தில் சட்டம் - ஒழுங்கு தொடர்பான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது

தேனி, ஜூன்.25-

திண்டுக்கல் சரக காவல்துறை துணைத் தலைவர் Dr.V.சசிமோகன், தலைமையில் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தேனி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தேனி மாவட்ட உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவல் ஆளினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநிறுத்துதல், குற்றச் சம்பவங்களைத் தடுக்கும் நடவடிக்கைகள், நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து விசாரணை செய்து முடித்தல், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு, போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சாலை பாதுகாப்பு தொடர்பான பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டன.மேலும், நீதிமன்றத்தில் முக்கிய வழக்குகளில் சிறப்பாக பணியாற்றி குற்றவாளிக்கு கடுமையான தண்டனை கிடைக்க செய்த காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கும், முக்கிய வழக்குகளில் திறம்பட செயல்பட்டுகுற்றவாளிகளை கைது செய்தக ாவல்துறையிரை பாராட்டி நற்சான்றிதழ்களை வழங்கினார்.

# தேனி மாவட்டம்உத்தமபாளையம் வட்டத்தில் ஐந்தாவது நாளாக நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் (ஜமாபந்தி) பொதுமக்களிடமிருந்து 232 கோரிக்கை மனுக்கள் ஏற்பு 42 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்



உத்தமபாளையம். ஜூன்.25-

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகத்தில், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களுக்கு 1435 ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) வருவாய் தீர்வாயஅலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது. அதன்படி, ஐந்தாவது நாளாக இன்றையதினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட வேப்பம்பட்டி, சீப்பாலக்கோட்டை, ஓடைப்பட்டி, அழகாபுரி, எரசக்கநாயக்கனூர், கன்னிசேர்வைப்பட்டி, எரசக்கநாயக்கனூர் (மலை) ஆகிய வருவாய் கிராமங்களுக்கு நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் 232 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர்(பொ) கவிதா அவர்கள் தலைமையில் ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை, மேகமலை ஆகிய வருவாய் கிராமங்களுக்கு நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் 126 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இன்றையதினம் நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் (ஜமாபந்தி) பொதுமக்களிடமிருந்து பட்டா மாறுதல், வீட்டுமனைப் பட்டாக்கள், இருப்பிடச்சான்றிதழ், வருமானச் சான்றிதழ், குடும்ப அட்டை, மாதாந்திர உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மொத்தம் 358 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. வருவாய் தீர்வாயத்தில்(ஜமாபந்தி) பெறப்படும் மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, தகுதி வாய்ந்த மனுக்களுக்கு உடனடி தீர்வு வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். உத்தமபாளையம் வட்டத்தில் இன்று நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் 10 பயனாளிகளுக்கு ரூ.10 இலட்சம் மதிப்பிலான இபட்டாக்களையும், 32 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் உத்தரவுக்கான ஆணைகளை வருவாய் தீர்வாய அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில் உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் .சையது முகைதீன் இப்ராஹிம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் .சுரேஷ்குமார், அலுவலக மேலாளர் (பொது) .சுந்தர்லால், வட்டாட்சியர் (உத்தமபாளையம்) பாலசண்முகம் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# காவேரிப்பட்டினம் அருகே திருக்கட நன்னீராட்டு பெருவிழா: மகா கும்பாபிஷேகம் கோலாகலம்





கிருஷ்ணகிரி, ஜூன்.25-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அருகே சாப்பரத்தி ஊராட்சிக்குட்பட்ட பனகமுட்லு கிராமத்தில் அமைந்துள்ள சுமார் 1,800 ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு தொட்டப்பன், அருள்மிகு காவேரியம்மன் மற்றும் அருள்மிகு மகா மாரியம்மன் திருக்கோயிலில் திருக்கட நன்னீராட்டு பெருவிழாவை முன்னிட்டு இன்று மகா கும்பாபிஷேகம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. இதையொட்டி அதிகாலை யாகசாலை பூஜைகள், வேத மந்திரங்கள் முழங்க புனித நீர் கலசங்களுக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன. தொடர்ந்து சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் ஓத, கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்போது திரளான பக்தர்கள் கலந்து கொண்டு "ஓம் சக்தி" என பக்தி முழக்கமிட்டு சுவாமி தரிசனம் செய்தனர்.கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மூலவர்களுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றது. மேலும் பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. விழாவில் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அருள்பெற்றனர்.

விழா ஏற்பாடுகளை கோயில் நிர்வாகம், விழாக்குழுவினர் மற்றும் ஊர் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



# மொகரம் திருவிழாவை முன்னிட்டு காவேரிப்பட்டினம் மேல்மக்கானில் அன்னதானம்

கிருஷ்ணகிரி, ஜூன்.25-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் மேல்மக்கானில் மொகரம் திருவிழாவை முன்னிட்டு நேற்று இரவு சிறப்பு அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை காவேரிப்பட்டினம் திமுக நகர செயலாளர் ஜே.கே.எஸ். பாபு மற்றும் மாவட்ட சிறுபான்மை பிரிவு நிர்வாகி ஜே.கே.எஸ். சாஜித் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.நிகழ்ச்சியில் மேல்மக்கான் கமிட்டியாளர்கள் காதர் பாட்ஷா, மசால் பாபு, அக்பர், இனாயத், சாதிக் பாஷா, அஜுஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் முகமது இத்ரீஸ், செய்தியாளர் மகபூப் பாஷா, மிட்டு, திமுக நிர்வாகிகள் பசுபதி, கணேசன், கருணாநிதி, கமால் பாஷா, நவாப் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மொகரம் திருவிழாவையொட்டி நடைபெற்ற இந்த அன்னதான நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு உணவருந்தினர். சமூக ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.



# முதல்வர் பிறந்தநாள் : பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மற்றும் பரிசுப் பெட்டகத்தை அமைச்சர் சரத்குமார் வழங்கினார்

தாம்பரம், ஜூன்.25-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இருபத்திரண்டாம் தேதி தாம்பரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தாம்பரம் மேற்கு பகுதி தவெக துணைச் செயலாளர் சாய் சரண்ராஜ் ஏற்பாட்டில் தங்க மோதிரம் பழங்கள் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான அத்தியாவாசி பொருட்கள் அடங்கிய பரிசு பெட்டகம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சரத்குமார் கலந்து கொண்டு முதலமைச்சர். ஜோசப் விஜய் பிறந்தநாள் அன்று தாம்பரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து பழங்கள் குழந்தைகளுக்கு தேவையான அத்தியாவாசி பொருட்கள் அடங்கிய பரிசுப் பெட்டகத்தை வழங்கினார் மேலும் இந்த நிகழ்ச்சியில் மருத்துவமனையில் பிரசவ வார்டில் இருந்த 38க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு பழங்கள் குழந்தைக்கு தேவையான அத்தியாவாசி பொருள்கள் அடங்கிய பரிசு பெட்டகத்தை அமைச்சர் சரத்குமார் வழங்கினார் உடன் செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட இணை செயலாளர் விஜய் தியாகு மற்றும் தவெக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும் மாண்புமிகு தமிழக முதல்வருமான தளபதியின் 52 வது பிறந்தநாளை முன்னிட்டு தாராபுரம் தெற்கு நகரம் சார்பாக 52 பயனாளிகளுக்கு ஒரு மாதத்திற்கு உண்டான மளிகை பொருட்களை நகர கழக செயலாளர் அபுத்தாஹீர் வழங்கினார் நகர இணை செயலாளர் அசோக் விழாவை ஒருங்கிணைத்து செய்தார் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக இணைச் செயலாளர் ஷேக் பரித் தலைமை தாங்கினார் முன்னாள் பொதுப்பணிதுறை அமைச்சர் கே வி, ராமலிங்கம், சாமுவேல் சத்தியபாமா, முன்னாள் ஆவின் துணைத் தலைவர் சிவக்குமார்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராம்குமார்,மாவட்ட தொழிலார் அணி அமைப்பாளர் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர்,வடக்கு நகர செயலாளர் கதிரேசன் பகாவுதீன் தஸ்லீம். மற்றும் தெற்கு நகர நிர்வாகிகள் வடக்கு நகர நிர்வாகிகள் வார்டு செயலாளர்கள் மற்றும் மாவட்ட, நகர ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்



■ கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலராக பணியாற்றிய திரு. அ. சாதனைக்குரல் அவர்களுக்கு பணி மாறுதலை முன்னிட்டு பாராட்டு மற்றும் வழியனுப்பு விழா நடைபெற்றது. இந்தியன் ரெட் கிராஸ் தலைவர் எஸ். செபாஸ்டியன் தலைமை தாங்க, செயலாளர் என். செந்தில் குமார் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் அரசு அலுவலர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு அவரது சிறப்பான சேவைகளை பாராட்டினர். தொடர்ந்து நினைவுப் பரிசு வழங்கி, புதிய பொறுப்பில் சிறப்பாக செயல்பட வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.





# வடகரை ஊராட்சியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்

மாதவரம், ஜூன்.25-

தமிழக முதல்வர் ச.ஜோசப்விஜயின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக வெற்றிக் கழகம் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் உறுப்பினர் சேர்க்கை அணி மாநில துணை செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு அறிவுறுத்தலின் பேரில் புழல் ஒன்றிய செயலாளர் என்.எஸ். மைக்கேல் ராஜன் தலைமையில் வடகரை ஊராட்சி மகளிரணி இணை அமைப்பாளர் விஜயலட்சுமி ஏற்பாட்டில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு சிறப்பு அன்னதானம் மற்றும் மகளிர் தன் வாழ்வில் சுயமாக முன்னேறுவதற்காக தையல் இயந்திரம், தூய்மை பணியாளர்களுக்கு புடவை, வேஷ்டி, அரிசி உள்ளிட்ட நலத்திட்ட வழங்கும் நிகழ்ச்சி மாதவரம் தொகுதி வடகரை ஊராட்சியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி இணை அமைப்பாளர் ஆதிகாமேஷ், வடகரை ஊராட்சி செயலாளர் புருசோத்தமன் உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் உறுப்பினர்கள், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# தேனி மாவட்டம்உத்தமபாளையம் வட்டத்தில் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளைமாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



உத்தமபாளையம், ஜூன்.25-

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உத்தமபாளையம் வட்டதிற்குட்பட்ட, காமயகவுண்டன்பட்டியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு மாணவர் விடுதியில் அடிப்படை வசதிகள் குறித்தும், உணவின் தரம் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ப விடுதியில் அனைத்து வசதிகளும் செய்து தர வேண்டும் எனவும், மாணவர்களுக்கு தரமான உணவு மற்றும் பாதுகாப்பான சூழல் தொடர்ந்து கிடைக்கப்பெறுவதை உறுதிசெய்ய வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து காமயகவுண்டன்பட்டி அரசு தொடக்கப்பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம், சுவை, சுகாதாரம் மற்றும் உணவுப் பொருட்களின் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, மாணவர்களுடன் கலந்துரையாடி, பள்ளியின் வசதிகள் மற்றும் மதிய உணவு குறித்து கேட்டறிந்தார். மேலும், கம்பம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாயிகளின் விளைப்பொருட்கள் சேமித்து வைக்கப்படும் இடங்கள், பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் விற்பனைக்கூடத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, விவசாய விளைப்பொருட்கள் விற்பனை செய்யப்படும் முறை, மின்னணு ஏல நடைமுறை மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.பின்னர்,உத்தமபாளையம் வட்டம், காமயகவுண்டன்பட்டியில் சங்கிலி கருப்பன் தண்ணீர் பாறை கல் உடைக்கும் மகளிர்நலச்சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்டு வரும் கல்குவாரியினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வில் உதவி இயக்குநர் (கனிமவளம்) மாரியம்மாள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் .சுரேஷ்குமார், மேலாளர் (வேளாண் விற்பனைக்குழு, தேனி) சுமதி, மேற்பார்வையாளர் (பொ) (ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், கம்பம்) மணிமேகலை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# நீலகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வேலை வாய்ப்பு

நீலகிரி, ஜூன்.25-
நீலகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு1.ED Secretary எண்ணிக்கை, கல்வி தகுதி: B.Sc Nursing / DGNM with Computer Knowledge. முன் அனுபவம் 2 வருடம், ஊதியம் 18,000/ p.m. 2. Data Entry Operator 01 :B.Sc Nursing / DGNM with Computer Knowledge. - 2 . 2- 15,000/- p.m. 3.Green Brigade 04 6, தகுதி: 10th Pass.ஊதியம் 8,500/ p.m. விண்ணப்பங்கள் (முழுமையான முகவரியுடன்) மற்றும் சான்றிதழ் நகல்கள் (கல்வித்தகுதி/சாதிச்சான்று/ ஆதார்) தபால் மூலமாக இவ்வலுவலகத்தில் பெற இறுதி நாள். 30.06.2026 மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ் நகல்கள் தபால் மூலமாக அனுப்ப வேண்டிய முகவரி: முதல்வர். அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, உதகமண்டலம், நீலகிரி 643005.





# பாடியநல்லூர் ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்தில் தீமிதி திருவிழா

மாதவரம், ஜூன்.25-
மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி பவானி நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்தில் 37ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய அறக்கட்டளை தலைவர் கிருஷ்ணன், செயலாளர் மாரியப்பன், பொருளாளர் கிருஷ்ணமூர்த்தி, ஆலய விழா குழுவினர்கள் ரகு, ராஜவேலு, ரமேஷ், சேதுராமன், வசந்தராஜா, பாலாஜி, முருகன், லட்சுமிபதி, பாஸ்கர், விக்னேஷ், மணிகண்டன், தனுஷ் ஷேசாத்திரி, ஹிமயதமிழ்செல்வன், லுதர்சனன், பாலாஜி, சந்தோஷ் மற்றும் ஆலய மகளிர் குழுவினர் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் அம்மனுக்கு 108 குங்குமம் அபிஷேகம், மஹா கணபதி ஹோமம், மஞ்சள்நீர் எடுத்தல், கொடிஏற்றுதல், காப்பு கட்டுதல், பூச்சோரல், பால்குடம் எடுத்தல், முளைப்பாரி எடுத்தல், பொங்கல் வைத்தல், திருவிளக்கு பூஜை, அக்னி கப்பறை எடுத்தல், பால்காவடி எடுத்தல், கூழ்வார்த்தல் மற்றும் அம்மனுக்கு சிறப்பு அலங்காரத்துடன் தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் காப்பு கட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவிற்கு ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் தீமிதி திருவிழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்ன தானம் வழங்கினர். பின்னர் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வாணவேடிக்கையுடன் திருவீதி உலா நடைபெற்றது.முடிவில் அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு மற்றும் சுமங்கலி பூஜை நடைபெற்றது.




# சென்னை அண்ணாநகரில் கண்ணைக்கட்டு கொண்டு 28 மாணவர்கள் 26 யோகாசனங்கள் செய்து உலக சாதனை படைத்தனர்

சென்னை, ஜூன்.25-
சென்னை அண்ணாநகரில் அமைந்துள்ள வள்ளியம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு சிறப்பு யோகா உலக சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு வள்ளியம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அறக்கட்டளை நிறுவன தலைவர் பிரீத்தி அறிவுடை நம்பி மற்றும் தாளாளர் நித்தின் அறிவுடைநம்பி ஆகியோர் தலைமை தாங்கினர். பள்ளி முதல்வர் டாக்டர் அமுதவல்லி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் யோகாவின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், வள்ளியம்மாள் மெட்ரிக் மேல்நிலை பள்ளியை சேர்ந்த 28 மாணவர்கள் கண்களைக் கட்டியபடி 26 வகையான யோகாசனங்களை செய்து அசத்தினர். மாணவர்களின் இந்த அபாரத் திறனை நோவா உலக சாதனை நிறுவனம் உலக சாதனையாக அங்கீகரித்தது. இதனைத் தொடர்ந்து சாதனை படைத்த மாணவர்களுக்கு நோவா உலக சாதனை அமைப்பின் இந்திய இயக்குனர் திலீபன் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை மாணவர்களுக்கு வழங்கி கவுரவித்தார். மாணவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு, சிறந்த ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்க்கையை உருவாக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதாக பள்ளி நிர்வாகம் தெரிவித்தது. இந்த உலக சாதனை நிகழ்ச்சி மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

# தாம்பரம் மேற்கு பகுதி சார்பில் முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவி பள்ளி மாணவ மாணவிகளின் ஊக்கத்தொகை வாங்கினார்கள்




தாம்பரம், ஜூன்.25-
செங்கல்பட்டு வட மேற்கு மாவட்டம் தாம்பரம் மேற்கு பகுதி சார்பில் முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா தாம்பரம் மேற்கு பகுதி கழக செயலாளர் எம் பிரவீன் குமார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக மனித வள மேம்பாட்டு துறை அமைச்சரும் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினரும் செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட கழக செயலாளர் டி.சரத்குமார், மாநிலப் பரப்புரை செயலாளர் நாஞ்சில் சம்பத், வடசென்னை வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் கழக பேச்சாளர் தேவகி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை தூய்மை பணியாளர்களுக்கு மளிகை பொருட்கள் பள்ளி குழந்தைகளுக்கு புத்தகப்பை பரிசு பொருட்கள் தாய்மார்களுக்கு பிரஷர் குக்கர் உள்ளிட்ட 1052க்கும் மேற்பட்டோருக்கு வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள் விஜய் தியாகு, ராஜேந்திரன், விஜயராஜ், வரலட்சுமி, சரவணன், கென்னடி , இளைஞரணி பிரகாஷ், மாவட்ட மாணவரணி சுபாஷ் ,ரூபன்,சந்துரு,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிரவீன் குமார்,மாவட்ட மகளிரணி இந்துமதி செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஜேம்ஸ் பிரபாகரன், சசிரேகாபிரவீன்குமார், தாம்பரம் மேற்கு பகுதி சாய் சரண்ராஜ், டில்லிபாபு, விக்கி மோகன், பாலச்சந்தர், திருநா, கோட்டி, மலர்விழி மற்றும் செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் தாம்பரம் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்
இறுதியில் தாம்பரம் மேற்கு பகுதி 51வது வட்டக் கழகச் செயலாளர் ஜே.டி.மைக்பிரவீன் நன்றி உரையாற்றினார்

# கவியரசு கண்ணதாசன் அவர்களின் 100வது பிறந்த நாள் விழா





சிவகங்கை, ஜூன்.25-
சிவகங்கை மாவட்டம்கவியரசு கண்ணதாசன் அவர்களின் 100வது பிறந்த நாள் அரசு விழாவை முன்னிட்டு, காரைக்குடியில் அமைந்துள்ள கவியரசு கண்ணதாசன் அவர்களின் மணி மண்டபத்தில், அன்னாரின் மார்பளவுச்சிலைக்கு, அரசின் சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.ஆகாஷ் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.
சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் உள்ள கவியரசு கண்ணதாசன் மணி மண்டபத்தில் இன்று (24.06.2026) செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் கவியரசு கண்ணதாசன் அவர்களின் 100வது பிறந்த நாள் விழா அரசு விழாவாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.ஆகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்து கவியரசு கண்ணதாசன் அவர்களின் மார்பளவுச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.
கவியரசு கண்ணதாசன் அவர்கள் கலை மற்றும் சினிமாத்துறையில் மிகுந்த பற்றுதல் கொண்டு சிறப்பாக செயல்பட்டதனால் அனைவராலும் போற்றப்பட்டவர் ஆவார். மேலும், அரசியலில் கால் பதித்து, பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டவர். கவியரசு கண்ணதாசன் அவர்களின் புகழை பறைசாற்றுகின்ற வகையில், அன்னாரது பிறந்த நாளினை அரசு விழாவாக கொண்டாடும் நோக்கில், அரசின் சார்பில் அரசு விழாவாக அறிவிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாக கண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், இந்தாண்டு கவியரசு கண்ணதாசன் அவர்களின் 100வது பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. மேலும், கவியரசு கண்ணதாசன் அவர்களை கௌரவப்படுத்திடும் வகையில், கவியரசு கண்ணதாசன் அவர்கள் பிறந்த மாவட்டமான சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடியில் தமிழக அரசின் சார்பில் அன்னாருக்கு மணிமண்டபம் கட்டப்பட்டு, அதில் மார்பளவுச்சிலையும் நிறுவப்பட்டுள்ளது.



■ திருப்பத்தூர் மாவட்ட புதிய பேருந்து நிலையத்தில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில், சர்வதேச போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தல் எதிர்ப்பு தினமான ஜூன் 26ஐ முன்னிட்டு, பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு ஒட்டு வில்லைகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அகூஷ்ய் அனில் வாகரே,இ.கா.ப., அவர்களும் (24.06.2026) அன்று ஒட்டி, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர். உடன் உதவி ஆணையர் (கலால்) வேடியப்பன், மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் விஜயகுமாரி, துணைக்காவல் கண்காணிப்பாளர் முரளி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பன்னீர்செல்வம், மோட்டார் வாகன ஆய்வாளர் முரளி மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# முதல்வர் பதிலுரையில் எந்த பதிலும் இல்லை அதிமுக எம்.பி. தனபால்

சென்னை, ஜூன்.25-
ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்துக்கு முதல்வர் அளித்த பதிலுரையில் எந்த பதிலும் இல்லை என்று தனபால் எம்.பி. கூறியுள்ளார். சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கோ, தவெக வாக்குறுதிகளுக்கோ எந்த பதிலும் இல்லாதது ஏமாற்றம் . முதலமைச்சர் விஜயின் பதிலுரையில் கதை, வசனம் நன்றாகவே இருந்தது, எழுதிக் கொடுத்தவருக்கு பாராட்டுகள் என தனபால் எம்.பி. விமர்சித்துள்ளார்



■ திருப்பத்தூர் மாவட்ட புதிய பேருந்து நிலையத்தில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில், சர்வதேச போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தல் எதிர்ப்பு தினமான ஜூன் 26ஐ முன்னிட்டு, போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அகூஷ்ய் அனில் வாகரே,இ.கா.ப., (24.06.2026) அன்று வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடையே வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். உடன் உதவி ஆணையர் (கலால்) வேடியப்பன், மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் விஜயகுமாரி, துணைக்காவல் கண்காணிப்பாளர் முரளி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பன்னீர்செல்வம், மோட்டார் வாகன ஆய்வாளர் முரளி மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக நுழைவாயிலில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில், பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அகூஷ்ய் அனில் வாகரே,இ.கா.ப., (24.06.2026) அன்று கொடியசைத்து துவக்கி வைத்து, எல்.இ.டி(LED) திரையின் மூலம் ஒளிபரப்பப்பட்ட போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு SAY NO TO DRUGS என்ற விழிப்புணர்வு குறும்படத்தினை பார்வையிட்டனர். உடன் உதவி ஆணையர் (கலால்) வேடியப்பன், மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் விஜயகுமாரி, முதன்மைக் கல்வி அலுவலர் இரா.புண்ணியகோட்டி, துணைக்காவல் கண்காணிப்பாளர் முரளி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பன்னீர்செல்வம், மோட்டார் வாகன ஆய்வாளர் முரளி, பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்

# தாட்கோ மற்றும் தனியார் நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான அழகுக்கலை பயிற்சி வழங்கபடவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவிப்பு

நீலகிரி, ஜூன்.25-
தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் தனியார் நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான அழகுக்கலை (Master Certification in Bridal Makeup Artistry Course) A (Diploma in Creative hair dressing chemical treatment Courses) போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் தாட்கோ மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான அழகுக்கலை (Master Certification in Bridal Makeup Artistry Course) A (Diploma in Creative hair dressing chemical treatment Courses) வழங்கப்படவுள்ளது
இப்பயிற்சியினை பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராகவும், பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவராகவும், வயது வரம்பு 18 முதல் 36 வயதிற்குள்ளும் மற்றும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். இப்பயிற்சிக்கான கால அளவு 45 நாட்கள் மேலும் திருச்சி மாவட்டத்தில் பயிற்சி நடைபெற உள்ளது. தகுதிபெறும் நபர்கள் பயிற்சி நடைபெறும் மாவட்டங்களில் தங்கி படிப்பதற்கான செலவினத் தொகை தாட்கோவால் ஏற்கப்படும்.இப்பயிற்சியில் தேர்ச்சி பெறும் தகுதியான நபர்களை பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலமாக வேலை வாய்ப்பும் அந்நிறுவனத்தின் மூலமாக ஆரம்ப கால மாத ஊதியமாக சுமார் ரூ.15000/ முதல் ரூ.25000/ வரையும் வருவாய் ஈட்டும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். இப்பயிற்சியில் சேருவதற்கு தாட்கோ இணையதளமான (www. tahdco.com) என்ற முகவரியில் பதிவு செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமிபவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# கண்ணதாசன் ஒரு சகாப்தம்!.

"உன்னை அறிந்தால்...நீ உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்
தலை வணங்காமல் நீ வாழலாம்"

என்று தன் பாடல் வரிகளால் உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் ஒரு திடமான நம்பிக்கையை ஊட்டியவர் கவிஞர் கண்ணதாசன்.

கவியரசு கண்ணதாசன் ஜூன் 24, 1927 ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே உள்ள சிறு கூடல்பட்டியில் சாத்தப்ப செட்டியார் விசாலாட்சி ஆச்சி இணையருக்கு மகனாகப் பிறந்தார். சிறு வயதிலேயே பழனியப்பச் செட்டியார் சிகப்பி ஆச்சி தம்பதியரால் தத்து எடுக்கப்பட்டு நாராயணன் எனப் பெயர் மாற்றப்பட்டார். எட்டாம் வகுப்பு வரை மட்டுமே முறைப்படி கல்வி பயின்றார்.

1949 ஆம் ஆண்டு வெளியான 'கன்னியின் காதலி' திரைப்படத்தில் ' கலங்காதிரு மனமே' என்ற பாடலை எழுதி தன் திரை வாழ்க்கையைத் தொடங்கிய கண்ணதாசன் 1981 ஆம் ஆண்டு வெளிவந்த ' மூன்றாம் பிறை ' திரைப்படத்தில் இடம் பெற்ற 'கண்ணே கலைமானே' என்ற பாடலுடன் தனது திரையுலக சகாப்தத்தை நிறைவு செய்தார். எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், ஜெமினிகணேசன் உள்ளிட்ட பல முன்னணி நடிகர்களின் திரைப்படங்களுக்கு காலத்தால் அழியாத பாடல்களை வழங்கியுள்ளார். எளிய வரிகளைக் கொண்ட 5,000க்கும் மேற்பட்ட தனது திரைப்பட பாடல்கள் மூலம் காதல், சோகம், தத்துவம், மகிழ்ச்சி என அனைத்தையும் அனைத்து தரப்பு மக்களிடமும் கொண்டு போய் சேர்த்த பெரும்பேறு பெற்றவர் கண்ணதாசன்.

* கண்ணே கலைமானே கன்னி மயிலெனக் கண்டேன் உனை நானே....

* மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..
வாரிவாரி வழங்கும் போது வள்ளலாகலாம்

* போனால் போகட்டும் போடா; இந்த
பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?
போனால் போகட்டும் போடா.

* மயக்கமா கலக்கமா மனதிலே குழப்பமா? வாழ்க்கையில் நடுக்கமா?வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல் தோறும் வேதனை இருக்கும்".

கண்ணதாசனின் இது போன்ற எண்ணற்ற பாடல்கள் காலத்தால் அழிக்க முடியாதவை.

4,000க்கும் மேற்பட்ட கவிதைகளையும் எழுதியுள்ளார். இவரது கவிதைகளில் தாய்மை, தத்துவம், வாழ்வியல் உண்மைகள் மற்றும் சமுதாயச் சிந்தனைகள் ஆழமாகவும் அழகாகவும் கையாளப்பட்டிருக்கும். 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் "திருமகள்" இதழில் வெளிவந்த "காலை குளித்தெழுந்து" எனத் தொடங்கும் கவிதையே கண்ணதாசன் இயற்றி வெளிவந்த முதல் கவிதை ஆகும். கண்ணதாசன் படைப்புகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் பல பாகங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கண்ணதாசன் கவிதைகள் பாகம் 1 மற்றும் பாகம் 2 மிகவும் பிரபலமான தொகுப்பாகும். 'மாங்கனி' என்பது காதலை மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட ஒரு சிறந்த நெடுங்கவிதை ஆகும். சங்ககால இலக்கியக் கதையை



நவீன கவிதையாக மாற்றியமைத்த படைப்பு 'ஆட்டனத்தி ஆதிமந்தி' ஆகும். கல்லக்குடி, மகா காவியம், ஆகியவை கண்ணதாசனின் கவிதைகளும் சில குறிப்பிட்ட தக்கவை ஆகும்.

இதழியல் துறையில் பரிணமித்த கண்ணதாசன் ஆசிரியராக இருந்து சில இதழ்களை நடத்தியும், தனது படைப்புகளை பிற இதழ்களில் வெளியிட்டும் வந்தார். அவற்றுள் முக்கியமானவை தென்றல், தென்றல் திரை, முல்லை, சண்டமாருதம், திருமகள் மற்றும் திரை ஒலி ஆகும். சேரமான் காதலி, சுயரூபம் மற்றும் மரகதத் தீவு ஆகியவை கண்ணதாசனின் கைவண்ணத்தில் வெளிவந்து முத்திரைப் பதித்த புதினங்கள் ஆகும். கண்ணதாசன் எழுதிய அர்த்தமுள்ள இந்து மதம் என்கிற ஆன்மீகப் படைப்பு 10 பாகங்களாக வெளிவந்து இலக்கிய உலகில் மாபெரும் சாதனை படைத்தது.

திராவிட சித்தாந்தத்தின் மீது தீவிரப் பற்று கொண்டிருந்த கண்ணதாசன் தொடக்க காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார். பகுத்தறிவுப் பாதையில் பயணித்த இவர், பிற்காலத்தில் ஆன்மீகத்தின் மீது ஈடுபாடு கொண்டவராக திகழ்ந்தார். அதற்கு முக்கியச் சான்றாக 'அர்த்தமுள்ள இந்து மதம்', 'இயேசு காவியம்' போன்ற அற்புதமான நூல்களைப் படைத்தார்.

'கவியரசு' என்று போற்றப்பட்ட கண்ணதாசன் கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்பு பெயரையும் பெற்றார். காரைமுத்துப்புலவர், வணங்காமுடி, கமகப்பிரியா, பார்வதிநாதன், ஆரோக்கியசாமி, துப்பாக்கி இவையாவும் கண்ணதாசனின் மற்ற புனைப்பெயர்கள் ஆகும்.

தமிழ் இலக்கிய உலகிலும், திரையுலகிலும் அழியாப் புகழ்பெற்ற 'கவியரசர்' கண்ணதாசன், தத்துவத்தை எளிமையாகவும், காதலை ஆழமாகவும் பாமரருக்கும் புரியும் வகையில் தந்தவர். மனித உணர்வுகளின் சிக்கலான பக்கங்களை வார்த்தைகளில் வடித்ததில் இவருக்கு நிகர் இவரே!

கண்ணதாசனின் சிறப்புகளை ஒரு கட்டுரைக்குள் கொண்டு வந்திட இயலாது. "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் " என்பது போல கவியரசு கண்ணதாசனின் சிறப்புகளில் சில:

* சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருது பெற்ற முதல் தென்னிந்தியக் கவிஞர் என்ற சிறப்பைப் பெற்றார். 1968 ஆம் ஆண்டு வெளியான 'குழந்தைக்காக' திரைப்படத்தில் இடம்பெற்ற "தேவன் வந்தான்" பாடலுக்காக இந்த விருது வழங்கப்பட்டது.

* 232க்கும் அதிகமான நூல்களை படைத்துள்ளார்.

* 1980ஆம் ஆண்டு இவரது 'சேரமான் காதலி' நாவலுக்காக சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது.

* தமிழக அரசின் அரசவைக் கவிஞராகப் பெருமைப்படுத்தப்பட்டார்.

* தனது வாழ்க்கை வரலாற்றை 'வனவாசம்' மற்றும் 'மனவாசம்' ஆகிய இரு நூல்களாக எழுதியுள்ளார்.

உடல்நலக்குறைவு காரணமாக அக்டோபர்17, 1981 ஆம் ஆண்டு, அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாநிலத்தில் உள்ள சிகாகோ நகரில் காலமானார்.

இவரது நினைவைப் போற்றும் வகையில், தமிழ்நாடு அரசு காரைக்குடியில் 'கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம்' அமைத்துள்ளது. 1981ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் எம்ஜிஆரால் ரூ.84 லட்சம் மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டு, 1990 ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் கருணாநிதியால் அடிக்கல் நாட்டப்பட்டு, 1992ஆம் ஆண்டு இன்றைய முதல்வர் ஜெயலலிதாவால் இம்மணிமண்டபம் மக்கள் பயன்பாட்டிற்காகத் திறக்கப்பட்டது. அங்கு கவிஞரின் முழு உருவ மார்பளவு சிலை கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ளது. கண்ணதாசனின் அரிய புகைப்படங்கள் மற்றும் அவரது வாழ்க்கை வரலாறு தொடர்பான குறிப்புகள் கண்காட்சியாக அங்கு வைக்கப்பட்டுள்ளன. 2,400 நூல்களுடன் ஒரு நூலகமும் அங்கு இயங்கி வருகிறது.

தமிழ் இலக்கிய உலகிலும், திரையுலகிலும் அழியாப் புகழ்பெற்ற 'கவியரசு' கண்ணதாசன், தத்துவத்தை எளிமையாகவும், காதலை ஆழமாகவும் பாமரருக்கும் புரியும் வகையில் தந்தவர். மனித உணர்வுகளின் சிக்கலான பக்கங்களை தனது கவிதை வரிகளில் வைரமாக பட்டையாய் தீட்டியவர். கவியரசர் கண்ணதாசனின் அடுத்த பிறந்த தினம் 2027 ஆம் ஆண்டு நூற்றாண்டு பிறந்த தினம் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழில் காலத்தால் அழியாத கவிதைகளாலும், தத்துவப் பாடல்களாலும் உயிரூட்டியவர் கவியரசர் கண்ணதாசனை அவரது பிறந்தநாளில் நினைவு கூர்வதோடு, தமிழுக்கு அவர் சேர்த்த பேருகளை என்றென்றும் போற்றுவோம் !

அச்சம் என்பது மடமையடா



அஞ்சாமை திராவிடர் உடைமையடா
இமயமலை எங்கள் மலையடா
இணைந்தே நிற்போம் தமிழரடா
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா"

**மகா பிரபு,**
ஆசிரியர், கட்டுரையாளர் – எழுத்தாளர்,
கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி,
கல்லல், 630305
சிவகங்கை மாவட்டம்
அலைபேசி: 9944089151

## முதலமைச்சர் விஜய் பிறந்தநாள்...வாணியன்குடியில் தவெக பிரமுகர் நாகராஜன் ஏற்பாட்டில் அறுசுவை அசைவ உணவு வழங்கல்

### மா செ.முத்துபாரதி எம்எல்ஏ. குழந்தைராணி நாச்சியார். பரமேஷ்வரன். பங்கேற்பு

சிவகங்கை, ஜூன்.25-

தமிழக முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை தவெக பிரமுகர் வாணியன்குடி நாகராஜன் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் அறுசுவை அசைவ உணவு வழங்கப்பட்டது... தவெக தெற்கு மாவட்டக்கழக செயலாளர் முத்துபாரதி தலைமையிலும் சிவகங்கை தெற்கு ஒன்றியக்கழக செயலாளர் வேம்பன்குடி பரமேஷ்வரன் முன்னிலையிலும் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின்ஸபோது சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார்



கலந்து கொண்டு அறுசுவை அசைவ உணவுகளை பொதுமக்களுக்கு வழங்கினார்...இந்த நிகழ்ச்சியின் போது தவெக நிர்வாகிகளான மா,வட்ட இளைஞரணி திணேஷ். மாவட்ட மகளிரணி தமிழரசி. மாவட்ட தொண்டரணி சஞ் சய். மூக்குத்தி பாலா . வினோத்குமார். உள்ளிட்ட ஒன்றிய. நகர. மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...நிகழ்ச்சி ஏற்பாடுகளை தவெக நிர்வாகி வாணியன்குடி நாகரஜன் மற்றும் வினோத்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்...

## முதலமைச்சர் பிறந்தநாள் விழா.. தவெக கல்பணா சபேசன் சிறப்பு பூஜை செய்து, இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்

### தவெக நிர்வாகி சிவகங்கை கல்பனா சபேசன் ஏற்பாடு

சிவகங்கை, ஜூன் .25-

சிவகங்கை மாவட்ட செயலாளர் முத்துபாரதி . சிவகங்கை நகர செயலாளர் தளபதிகோபி ஆகியோரின் ஆலோசனையின் பேரில் .தமிழக வெற்றிக் கழக நிர்வாகியும் சமூக ஆர்வலருமான கல்பனா சபேசன் ஏற்பாட்டில் கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி முதலமைச்சர் விஜயின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடினார்...



சிவகங்கை நகரில் உள்ள திருக்கோவிலில் முதலமைச்சர் ஜோஸப் விஜயின் பெயரில் சிறப்பு பூஜை வழிபாடுகள் நடத்தி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி கொண்டாடினார்.... கல்பனா சபேசன் ஏற்பாட்டில் நடைநெற்ற இந்த நிகழ்ச்சியின் போது சிவாஜிரசிகர்மன்ற தலைவர் தமிழரசன் உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் மற்றும் பெண்கள் என ஏராளமானோர் உடனிருந்தனர்...முன்னதாக முதலமைச்சர் ஜோஸப் விஜயின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு. சிவகங்கை நகர் மருதுபாண்டியர் பள்ளி வளாகத்தில் சிறுவர்களுக்கான கால்பந்தாட்ட விளையாட்டு போட்டியை நடத்தி தனது சொந்த நிதியில் ஏற்பாடு செய்து வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கியது குறிப்பிடத்தக்கது...




■ சிவகங்கை மாவட்டம் மன்னர் துரை சிங்கம் அரசு கலைக் கல்லூரியில் போதை தடுப்பு விழிப்புணர்வு மற்றும் உறுதிமொழி நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி கல்லூரியின் முதல்வர் தலைமையிலும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் பாதுகாப்பு அலுவலர் ராமச்சந்திரன் முன்னிலையிலும் மாவட்ட காவல்துறையின் சார்பாக சைபர் குற்றப்பிரிவு ஆய்வாளர் மற்றும் மதுவிலக்கு பிரிவு ஆய்வாளர் மற்றும் கல்லூரி மாணவ மணிகள் பேராசிரியர் பெருமக்கள் ஆகியோ கலந்து கொண்டனர்..



■ தமிழக வெற்றிக் கழக அலுவலகம் திறப்பு கிருஷ்ணகிரி மாவட்டம்,காவேரிப்பட்டினத்தில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகத்தின் மேற்கு ஒன்றிய மற்றும் பேரூர் கழக அலுவலகம் திறப்பு விழாமேற்கு ஒன்றிய செயலாளர் விஜய்குமார்,பேரூர் கழக செயலாளர் தமிழ்குமரன் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன், கலந்து கொண்டு புதிய அலுவலகத்தை திறந்து வைத்தார்.

## திருச்செந்தூர் முருகன் கோயிலில் கட்டண உயர்வு இல்லை அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ்

தூத்துக்குடி, ஜூன் .25-

திருச்செந்தூர் முருகன் கோயிலில் கட்டண உயர்வு எதுவும் இல்லை என அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் பேட்டியளித்துள்ளார். திருச்செந்தூர் கோயிலில் நிலவி வந்த முறைகேடு குறித்து மட்டுமே நடவடிக்கை எடுத்தோம். மக்கள் விருப்பத்திற்கு மாறாக அரசு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காது என அமைச்சர் ரமேஷ் தெரிவித்துள்ளார்




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161